**செய்தி வெளியீடு எண் : 1526** **நாள் : 04.09.2022**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி இன்று (04.09.2022) தமிழகம் முழுவதும் நடைபெற்ற 35வது சிறப்பு மெகா கோவிட்– 19 தடுப்பூசி முகாமில் 12.28 இலட்சம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டது

## மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தகவல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்களில் என மொத்தம் 50,000 சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாம்கள் நடைபெற்றது.

இதுவரை நடைபெற்ற 34 மெகா கோவிட் தடுப்பூசி முகாம்களில் 5 கோடியே 10 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளார்கள்.

ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின் படி, 12–14 வயதுயுடைவர்களுக்கு கோவிட் தடுப்பூசி வழங்கும் திட்டம் 16–03–2022 அன்று தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. இதுவரை (04–09–2022) **19,76,537 (93.19%)** பயனாளிகளுக்கு முதல் தவணை மற்றும் **14,98,193 (70.64%)** பயனாளிகளுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 15–17 வயதுயுடைவர்களுக்கு கோவிட் தடுப்பூசி வழங்கும் திட்டம் 03–01–2022 அன்று தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. இதுவரை (04–09–2022) **30,50,267 (91.16%)** பயனாளிகளுக்கு முதல் தவணை மற்றும் **25,81,517 (77.15%)** பயனாளிகளுக்கு இரண்டாம் தவணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், சுகாதார பணியாளர்கள், முன்களப்பணியாளர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முன்னெச்சரிக்கை தவணை வழங்கும் திட்டம் 10–01–2022 அன்று தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. இதுவரை (04–09–2022) மொத்தம் 70,41,453 **(16.94%)** பயனாளிகளுக்கு முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று (04–09–2022) நடைபெற்ற சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாமில் 12 வயதிற்கு மேற்பட்ட 12,28,993 பயனாளிகளுக்கு கோவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. இதில் முதல் தவணையாக 78,337 பயனாளிகளுக்கும் இரண்டாவது தவணையாக **2,91,028** பயனாளிகளுக்கும் மற்றும் **8,59,628** பயனாளிகளுக்கு முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை 18 வயதிற்கு மேற்பட்டோரில் **96.39%** முதல் தவணையாகவும் 90.**61%** இரண்டாம் தவணையாகவும் கோவிட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் அமைக்கப்பட்ட சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாம்களை நேரடி கள ஆய்வு செய்தார்கள். இதில் மக்கள் மற்றும் குடும்ப நல்வாழ்வுத் துறை சுகாதார செயலாளர் டாக்டர்.பி.செந்தில் குமார் அவர்கள் மாண்புமிகு மேயர் திருமதி. ஆர்.பிரியா அவர்கள், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.த.வேலு அவர்கள், இணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு. சங்கர்லால் குமாவாத், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி. டி.சினேகா, இ.ஆ.ப., அவர்கள், மாநகர நல அலுவலர் மற்றும் மாநகர மருத்துவ அலுவலர் கலந்து கொண்டனர்.

மேலும், மாநிலத்தில் இன்று (04.09.2022) நடைபெற்ற சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினை முன்னிட்டு நாளை (05.09.2022) கோவிட் தடுப்பூசி பணிகள் நடைபெறாது என தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in